FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313250

1. District : Coimbatore PS: VJ A.C Year: 2026 FIR No.: 22/2026 Date: 24.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 17.00hrs

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended by 2018 and BNSS Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 106 BNSS
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : May 2026 Date to : 23.10.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2026 நேரம் 1500hrs
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Volume II நேரம் 1500hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 18kms South Direction Madukkarai Municipality office Coimbatore Dist.
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. N. Vijayakumar (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 5/4/2026 (d) Nationality Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Inspection Cell (g) Address :
தொழில் முகவரி office Tamilnadu Collector office Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) தலைமைச் செயற்குழு அலுவலக மதுக்கரை நகராட்சி, (2) S. Karthik உருவாம் உதவியாளர் (3) வல்லாத இளநிலை உதவியாளர் (4) C. Dhanushkodi ஆய்வாளர் (5) அனிதா, தூய்மைப் பணியாளர் (6) சோபனா பிரபாகரன் பிறந்த இரா காவலர் மதுக்கரை (7) L. பிரபாகரன் க/பெ லட்சுமணன் ஒப்பந்ததாரர் (8) திருமதி, க/பெ. முருகன் அலுவலக உதவியாளர் மதுக்கரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதத்திற்கான காரணம் தெளிவு.

No Delay

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, If required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நிலைய தகவல் அறிக்கை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக். கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/2026

24/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA

15. Date & Time of despatch to the court: 24.10.2026 18.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை INSPECTOR No. எண் .....
VGA Colony

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

Contents of FIR in Cr.No.22/2026/AC/CB, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the prevention of corruption (Amendment) Act, 2018 and u/s 106 BNSS.

இன்று 24.10.2026 ஆம் தேதி 15.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது கோவை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.N.விஜயகுமார் அவர்கள் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் N.விஜயகுமார், துணை ஆய்வுகுழு அலுவலர்/வட்டாட்சியர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. ந.க.எண்.224/2026/ஐ1, நாள் 24.10.2026 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - கோயம்புத்தூர் மாவட்டம் - மதுக்கரை நகராட்சி அலுவலகம் -- திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அளித்தல் - சம்மந்தமாக. கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை நகராட்சி அலுவலக வரிவசூலர்கள், வருவாய் பிரிவு அலுவலர்கள், நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள் இவ்வலுவலகத்திற்கு கட்டிட அனுமதி பெறுவதற்கும், சொத்துகளை அளவீடு செய்து அதற்கான வரி நிர்ணயம் செய்து, வரி விதிப்பு புத்தகம் வழங்குவதற்கும், குடிநீர் இணைப்பு வழங்குவதற்கும், வரியினங்களில் பெயர் மாற்றம் செய்வதற்கும் வரும் பொதுமக்களிடமிருந்தும் ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் தகவலின் பேரில், கோயம்புத்தூர் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலராகிய நான், கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ஷீலா மற்றும் காவல் குழுவினருடன் இணைந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 23.10.2026-ஆம் தேதி 14.30 மணிக்கு புறப்பட்டு சென்று மதுக்கரை நகராட்சி அலுவலகத்தில் திடீர் தணிக்கை

23.10.2026-ஆம் தேதி 15.40 மணி முதல் 21.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

முதலில் மதுக்கரை நகராட்சி அலுவலகமானது வடக்கு பார்த்தவாறு மெயின் கேட்டுடன் காணப்படுகிறது, அலுவலகத்தின் முன்புறத்தில் வாகனம் நிறுத்துமிடத்தை தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை நகராட்சி அலுவலகமானது பழையக்கட்டித்தில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. மேலும் கூடுதலாக மதுக்கரை நகராட்சி அலுவலகமானது புதிய கட்டிடமானது தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. மேற்படி துணை ஆய்வுக்குழு அலுவலர், காவல் ஆய்வாளர் D.ஷீலா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்கும்போது ஆணையாளர் அவர்கள் அலுவலத்திற்குள் அவரது வாகன எண்.TN99 X0078-ல் போலிரோ வாகனத்தில் வந்தவரிடம் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் ஆணையாளர் திருமதி.சத்யா அவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் கூட்டுத்தனிக்கை மேற்கொள்ள வந்திருந்த விபரத்தை அவரிடம் தெரிவித்து தனக்கு உதவியாக காவல் ஆய்வாளர் D.ஷீலா மற்றும் காவல் குழுவினர்கள் ஆகியோரை அறிமுகப்படுத்தி வைத்து அனைவரது அடையாள அட்டைகளை காண்பித்து அவரவர்களை அவர் முன்பு சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பழைய அலுவலகமானது கிழக்குபுறமாக வடக்கு பார்த்தவாறு தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் காணப்பட்டது. அதில் தரைத்தளத்தில் நகர மன்றத்தலைவர் அறை, பதிவறை எழுத்தர் இருக்கை அதனை அடுத்து வீடியோ கான்பரன்ஸ் அறையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையை சேர்ந்த ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் தற்காலிகமாக தணிக்கை செய்யும் அறை, நேர் எதிரில் இளம் பொறியாளர் திட்டம் அறை, அதை தாண்டினாற்போல் முதல் தளத்திற்கு செல்லும் மாடிபடிக்கட்டுகள் அதை ஒட்டினாற் போல் முன்பு வரி வசூல் அறையென்றும் தற்போது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அடுக்கி வைத்திருந்தும், அதற்கு

வடபுறமாக வருவாய் பிரிவில் வரிவசூலர் டேபிளும், அதற்கு வடபுறமாக மேலாளர் அறையும் ஆகியவை அமைந்திருந்தது மற்றும் முதல் தளத்தில் சுகாதாரப்பிரிவு மற்றும் நகர் மன்றக் கூடம் ஆகியவை காணப்பட்டது. மேற்படி அலுவலகத்தை சோதனை செய்வதற்கு சோதனை குழுவினர்கள் சில பிரிவுகளாக பிரித்து அவர்களை இவ்வலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள தரைத்தளத்தில் நகர மன்றத்தலைவர் அறையை பார்வையிட மேற்படி அறையானது பூட்டியிருந்தது பற்றி கேட்க, தி.மு.க.வைச் சேர்ந்த நகர மன்ற தலைவி திருமதி.நூர்ஜகான் நாசர் அவர்கள் மாதம் ஒருமுறைதான் மாமன்ற உறுப்பினர்கள் கலந்தாய்வுக் கூட்டத்திற்கு கலந்துகொள்ள வருவார் என்றும், மற்றநாட்களில் பூட்டப்பட்டுதான் இருக்கும் என்றும் தெரிவித்தார்கள். பதிவறை எழுத்தர் இருக்கையில் திரு.ம.வெங்கடேசன், பதிவறை எழுத்தராக 01.03.2019 முதல் பணிக்கு சேர்ந்தும் தற்போது வரை பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டபோது தற்சமயம் ரூ.60/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட காலையில் ரூ.300/-கொண்டுவந்ததாக பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஹாலின் வெளிப்புறமாக 2 வரிவசூலர்கள் அமர்ந்து பணிபுரிவதற்காக போடப்பட்டிருந்த மேஜையுடன் கூடிய இருக்கையில் வருவாய் உதவியாளர் திரு.கார்த்திக் மட்டும் அமர்ந்திருந்தார், அவரிடம் மற்றொரு வருவாய் உதவியாளர் திரு.சசிக்குமார் அவர்கள் மதிய உணவிற்காக சென்றுள்ளதாக சொன்னார். வரிவசூலர் திரு.கார்த்திக் அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டபோது ரூ.6,040/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து அவரை விசாரித்தபோது அந்த தொகைக்கு முன்னுக்குப்பின் முரணாக பதிலளித்தார். மேலும் அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட பணம் கொண்டுவந்ததாக பதிவு மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அந்த தொகையை துணை ஆய்வுக்குழு அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் GPay கணக்கு பரிவர்த்தனைப் பற்றி கேட்க தனது செல்போனை பார்த்தும் அதில்

இருந்த பரிவர்த்தனைகளின் விபரத்தை தனது செல்போன் எண்.9894819112-ன் GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.7,52,572/- என்றும் தெரிவித்தார். அதனை அடுத்து வீடியோ கான்பரன்ஸ் அறையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையை சேர்ந்த உதவி ஆய்வாளர் திருமதி.ந.கீர்த்தனா தேவி தற்காலிகமாக தணிக்கை செய்வதற்காக வந்துள்ளதாகவும், ஆய்வாளர் திரு.செல்லபாண்டியன் அவர் இன்று மட்டும் விடுமுறையில் உள்ளார் என்றும், தாங்கள் அக்டோபர் 1-ஆம் தேதி முதல் நகராட்சியில் வருடம் ஒருமுறை செய்யும் நிதி தணிக்கை செய்ய வந்துள்ளதாகவும், மேற்படி தணிக்கையில் தினசரி வரவின் தணிக்கை, வரவு செலவுகள் மற்றும் கணக்குகள் இவை அனைத்தும் அரசு விதிகளுக்குட்பட்டுள்ளதா என்பதை தணிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார். அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டப்போது தற்சமயம் ரூ.140/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. நேர் எதிரில் இருந்த இளம் பொறியாளர் திட்டம் அறையில் இருந்த இளநிலை உதவியாளர் திரு.மு.முரளி அவர்களை விசாரித்தபோது அவரது அறையில் திருமதி.ரோசினி, நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் காலையில் அயல்பணிக்கு கருமத்தம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சென்றுவிடுவார் என்றும் தெரிவித்தார். அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டப்போது தற்சமயம் ரூ.200/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட கொண்டுவந்ததாக பதிவு எதுவும் மேற்கொள்வில்லை. மதியம் உணவிற்கு சென்றுவிட்டு வீட்டிலிருந்து ரூ.200/- எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேலாளர் அறைக்கு தென்புறமாக ஹாலில் வருவாய் பிரிவில் வரிவசூலர் மேஜையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.எஸ்.வல்லரசு என்றும் தான் கடந்த 02.09.2023 ஆம் தேதி முதல் பணிசெய்து வருவதாக தெரிவித்தார். அவரிடமிருந்த பணத்தை குறித்து

கேட்டபோது அவரிடமிருந்த ரூ.4,300/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை குறித்து அவரை விசாரித்தபோது, அதற்கு அவர் தொழில் வரிக்காக ரூ.2,500/- திரு.ஸ்ரீநாத் என்பவரின் செல்போன் எண்.8248913170-லிருந்து தனது செல்போன் 7604844181 என்ற எண்ணிற்கு காலையில் 11.11 மணிக்கு அனுப்பிவைத்தார் என்றும், மேலும் அலுவலக உதவியாளர் திருமதி.சித்ரா அவர்களுக்காக நேற்று 22.03.2026-ஆம் தேதி LIC Insurance-க்கு ரூ.1,879/- தனது GPay கணக்கிலிருந்து செலுத்திய வகையில் இன்று மதியம் திருமதி.சித்ரா அவர்கள் நேரில் வந்து தன்னிடம் கொடுத்தார்கள் என்றும் மதியம் பெட்ரோல் போட்ட வகையில் ரூ.200/- செலவானது என்றும் முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னார். மேலும் அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட பணம் கொண்டுவந்ததாக பதிவு மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அந்த தொகை ரூ.4,300/-ஐ துணை ஆய்வுக்குழு அவர்களால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் GPay கணக்கு பரிவர்த்தனைப் பற்றி கேட்க தனது செல்போனை பார்த்தும் அதில் இருந்த பரிவர்த்தனைகளின் விபரத்தை தனது செல்போன் எண்.7604844181-ன் GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.19,65,655/- என்றும் தெரிவித்தார். வடபுறமாக மேலாளர் அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திருமதி.சித்ரா என்றும் தான் 09.03.2026-ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார் அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டப்போது ரூ.590/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவரது செல்போனை சோதனை செய்தபோது அதின் பின்புறம் ரூ.500/- வைத்திருப்பதை அவரிடம் கேட்டபோது. அந்த தொகை அவசர தேவைக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும் அலுவலக ரொக்கப் பதிவேட்டை பார்வையிட்டபோது அவரது பெயரில் பணம் ஏதும் பதிவு செய்யபடவில்லை. மற்றும் முதல் தளத்தில் சுகாதாரப்பிரிவு அறையில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.மணிகண்டன் தான் கடந்த 2023-ஆம் வருடமுதல் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும்

தெரிவித்தார். அவரிடமிருந்த பணத்தை குறித்து கேட்டப்போது தற்சமயம் ரூ.200/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் அவரின் சொந்த பணம் என்று கூறியதால், அத்தொகை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அலுவலக ரொக்கப்பதிவேட்டை பார்வையிட்டபோது அவரது பெயரில் தொகை எதுவும் பதிவு மேற்கொள்ளவில்லை. மேலும் அவரிடம் GPay கணக்கு பரிவர்த்தனைப் பற்றி கேட்க தனது செல்போனை பார்த்தும் அதில் இருந்த பரிவர்த்தனைகளின் விபரத்தை தனது செல்போன் எண்.9488950860-ன் GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.6,43,400/- என்றும் தெரிவித்தார். மேலும் தரைத்தளத்தில் காணப்படுவது போன்று இருக்கும் அறைகள் எல்லாம் பூட்டப்பட்ட நிலையில் இருந்ததுபற்றி அவரிடம் கேட்க, கடந்த வருடம் முதல் செயல்பட்டு வரும் புதிய கட்டிடத்திற்கு சென்றுவிட்டதாக தெரிவித்தார். மேற்கண்ட நபர்களிடம் இருந்து பெறப்பட்ட தொகைகளின் விபரங்கள் பின்வருமாறு:-

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1	திரு.கார்த்திக், வரிவசூலர், மதுக்கரை நகராட்சி, கோவை	ரூ.6,040/- மற்றும் GPay Amount Rs.7,52,572/-	தனது செல்போன் எண்.9894819112-ன் GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.7,52,572/- என்று தெரிவித்தார்.
2	திரு.எஸ்.வல்லரசு வரிவசூலர், மதுக்கரை நகராட்சி, கோவை	ரூ.4,300/- மற்றும் GPay Amount Rs. Rs.19,65,655/-	அவரிடமிருந்த ரூ.4,300/- பணத்தை குறித்து விசாரித்தபோது, தொழில் வரிக்காக ரூ.2,500/- திரு.ஸ்ரீநாத் என்பவரின் செல்போன் எண்.8248913170-லிருந்து தனது செல்போன் 7604844181 என்ற GPay கணக்கிற்கு காலையில்

			11.11 மணிக்கு அனுப்பிவைத்தார் என்றும், மேலும் அலுவலக உதவியாளர் திருமதி.சித்ரா அவர்களுக்காக நேற்று 22.03.2026-ஆம் தேதி LIC Insurance-க்கு தான் ரூ.1,879/- தனது GPay கணக்கிலிருந்து செலுத்திய வகையில் நேற்று மதியம் திருமதி.சித்ரா அவர்கள் நேரில் வந்து தன்னிடம் கொடுத்தார்கள் என்றும் மதியம் பெட்ரோல் போட்ட வகையில் ரூ.200/- செலவானது என்றும், முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னதால் அத்தொகை ரூ.4,300/-ஐ துணை ஆய்வுக்குழு அலுவலரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் செல்போன் எண்.7604844181 GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.19,65,655/- என்று தெரிவித்தார்.
3	திரு.மணிகண்டன், துப்புரவு ஆய்வாளர், மதுக்கரை நகராட்சி, கோவை	GPay Amount Rs.6,43,400/-	தனது செல்போன் எண்.9488950860 GPay Account மூலம் 6-மாத காலமாக பரிவர்த்தனை செய்த தொகை Rs.6,43,400/- என்று தெரிவித்தார்.

மேலும் மேற்கு புறமாக இருந்த மதுக்கரை நகராட்சி அலுவலக புதிய கட்டிடமானது தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது.

தரைத்தளத்தில் வரிவசூல் மையம் அதற்கு தென்புறமாக பொதுப்பிரிவு அறை, அதற்கு அடுத்தாற்போல் நகரமன்ற அறை அதற்கு எதிரில் மேற்குபுறமாக ஆணையாளர் அறை அதற்கு வடபுறமாக கணக்குபிரிவு அறையும் காணப்பட்டது.

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தின் புதிய கட்டிடத்தின் வரி வசூல் மையம் மற்றும் பொதுப்பிரிவு தரை தளத்தில் ஆஜரில் இருந்தவர்களின் விபரம் பின்வருமாறு:

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்
1.	திருமதி.J.அனிதா, வயது 47, த/பெ.ஜெகநாதன், தூய்மை பணியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.
2.	திருமதி.S.சோபனா, வயது 34, க/பெ.ஜெகதீஸ்பிரசாத், இரவு காவலர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.
3.	திருமதி.M.சித்ரா, வயது 53, க/பெ.முருகன், அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.
4.	திருமதி.ரோசிஜான், வயது 41, க/பெ.பிரபாகரன், Computer Operator, மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.
5.	திரு.R.வெங்கடேசன், வயது 38, த/பெ.ராஜாமணி, இளநிலை உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.

மதுக்கரை நகராட்சி அலுவலகத்தின் புதிய கட்டிடத்தின் வரி வசூல் மையம் மற்றும் பொதுப்பிரிவு தரை தளத்தில் கீழ்கண்ட அலுவலக ஆளிநர்களிடம் நடத்திய சோதனையின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விபரம்
1.	திருமதி.J.அனிதா, வயது 47, த/பெ.ஜெகநாதன், தூய்மை பணியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.	ரூ.100/- G-Pay amount Rs.3,83,342/-	வரி வசூலர்களான திரு.சசிக்குமார் மற்றும் திரு.வல்லரசு ஆகியோர்கள் நேரடியாக சென்று பொதுமக்களிடமிருந்து வரி வசூல் செய்து அவர்களது G-Pay மூலம் எனது G-Pay க்கு அனுப்பி வைத்த

			தொகை மற்றும் எனது சொந்த செலவிற்காக அவர்களிடமிருந்து EMI செலுத்துவதற்காக வாங்கிய தொகையாகும்.
2.	திருமதி.S.சோபனா, வ்யது 34, க/பெ.ஜெகதீஸ்பிரசாத், இரவு காவலர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.	**G-Pay amount Rs.5,06,873/-**	நான் நேரடியாக வங்கிக்கு செல்ல இயலாத நேரத்தில், எனது சித்தி அவர்களுக்கு சீட்டு தொகை செலுத்த வேண்டி இருந்தது அதற்காக வரி வசூலர் திரு.வல்லரசு அவர்களுக்கு கையில் தொகை கொடுத்து அதை என்து G-Pay -ன் மூலம் பெற்றுக்கொள்வேன்.
3.	திருமதி.M.சித்ரா, வயது 53, க/பெ.முருகன், அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.	ரூ.5,280/-	கோவிலுக்கு விஷேசத்திற்கு கொடுக்க வேண்டி தொகை என்றும், இன்று 23.10.2026-ம் தேதி ஒரு மணி நேரம் அனுமதி விடுப்பு பெற்று அலுவலகத்திற்கு வந்ததாகவும், அதனால் பண பராமரிப்பு பதிவேட்டில் பதிவு செய்ய மறந்து விட்டதாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாத காரணத்தினாலும் பண பராமரிப்பு பதிவேட்டில் பதிவு செய்யாத காரணத்தினாலும் கைப்பற்றப்பட்டது.
4.	திருமதி.ரோசிஜான், வயது 41, க/பெ.பிரபாகரன், Computer Operator,	ரூ.70/-	அவரது சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று

	மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.		தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரது பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.C.ராஜேஸ்குமார், த/பெ.செல்லக்குட்டி, ஒப்பந்ததாரர், கதவு எண்.5/49, சீலியூர், கோவை	ரூ.52,500/-	மேற்படி பணம் ரூ.50,000/- குறித்து அவரது விளக்கம் ஏற்க்கொள்ளும்படியாக இல்லாத காரணத்தினால் இந்த பணம் Oversear திரு.முத்துவேல் மூலம் நகராட்சி பொறியாளர் திரு.ஜான்பிரபு என்பவருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கும் என்ற சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்டது. அவரது சொந்தப்பணம் ரூ.2,500/- அவரிடமே திரும்ப வழங்கப்பட்டது.

மேலும் மதுக்கரை நகராட்சி அலுவலக புதிய கட்டிடமானது முதல் தளத்தில் வடகிழக்குபுறமாக குடிநீர் வழங்கல் பிரிவு அறையும் அதற்கு தென்புறமாக பதிவுவைப்பறை அதற்கு அடுத்தாற்போல் கழிப்பிட அறையும் அதற்கு நேர் எதிரில் மேற்கு புறமாக பொறியாளர் அறையும் அதற்கு வடபுறமாக பொறியியல் பிரிவும் ஆகியவை காணப்பட்டது. மேற்படி தளத்தில் ஆஜரில் இருந்தவர்களின் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலர்கள்
1.	திரு.M.ஜான்பிரபு, நகராட்சி பொறியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
2.	திரு.V.முத்துவேல், பணி மேற்பார்வையாளர், மதுக்கரை நகராட்சி

	அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
3.	திரு.R.ஆறுமுகம், இளநிலை உதவியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
4.	திருமதி.M.விஜயா, பணிமேற்பார்வையாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
5.	திரு.N.ராஜ்குமார், பிட்டர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
6.	திரு.N.முருகேசன், Electrician Grade-II, மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
7.	திரு.J.ஷேக் அமீர், அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
8.	திருமதி.S.சுரேகா, துப்புரவு பணியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
9.	திரு.கே.சதீஸ், தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.

மேலும் மேற்படி தளத்தில் ஆஜரில் இருந்த ஒப்பந்தாரர் மற்றும் பொதுமக்களின் விபரம் பின்வருமாறு:

வ. எண்.	ஆஜரில் இருந்தவர்கள்
1.	திரு.ரவிக்குமார், Prabha Industry, V-ம் தர ஒப்பந்ததாரர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.
2.	திரு.மகேந்திரன், த/பெ.மல்லயன், ஒப்பந்தாரர், எண்.3/343, Shooting Range Road, காந்திநகர், மதுக்கரை, கோயம்புத்தூர்.

மேற்படி தளத்தில் இருந்த அலுவலர்களிடம் நடத்திய சோதனையின் விபரம் பின்வருமாறு:

வ. எண்	ஆஜரில் இருந்து அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விபரம்
1.	திரு.M.ஜான்பிரபு, நகராட்சி பொறியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.30/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.

2.	திரு.V.முத்துவேல், பணி மேற்பார்வையாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.10/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
3.	திரு.R.ஆறுமுகம், இளநிலை உதவியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.100/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
4.	திருமதி.M.விஜயா, பணிமேற்பார்வையாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.100/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
5.	திரு.N.ராஜ்குமார், பிட்டர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.50/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
6.	திரு.N.முருகேசன், Electrician Grade-II, மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.210/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
7.	திரு.J.ஷேக் அமீர், அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.10/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
8.	திருமதி.S.சுரேகா, துப்புரவு பணியாளர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை.	ரூ.20/-	தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்தார்.
9.	திரு.கே.சதீஸ், தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.1260/-	தண்ணீர் வரி வசூல் செய்த பணம் ரூ.1260/-ஐ 25-வது வார்டு Waterman திரு.A.ரகு அவர்கள் ரசீது போடுவதற்காக கொடுத்த பணம் என்று தெரிவித்தார். விசாரணைக்கு பின்பு அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

10.	திரு.ரவிக்குமார், Prabha Industry, V-ம் தர ஒப்பந்ததாரர், மதுக்கரை நகராட்சி அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.14,000/-	அவரை சோதனை செய்தபோது அவர் அணிந்திருந்த பேன்டின் வலது புற பாக்கெட்டில் 500 ரூபாய் நோட்டு கத்தைகள் இரண்டு காணப்பட்டது. அதனை எடுத்து பார்வையிட்டபோது ஒரு கத்தையில் 500 x 18= ரூ.9,000/-ம் மற்றொரு கத்தையில் 500 x 10= ரூ.5,000/-ம் இருந்தது. அதனைப்பற்றி விசாரிக்க, அதற்கு உரிய முகாந்திரமோ விளக்கமோ தெரிவிக்காததால் மேற்படி பணம் ரூ.14,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த மணிபர்சில் ரூ.1290/- இருந்தது. மேற்படி பணம் அவரின் சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.
11.	திரு.மகேந்திரன், த/பெ.மல்லயன், ஒப்பந்தாரர், எண்.3/343, Shooting Range Road, காந்திநகர், மதுக்கரை, கோயம்புத்தூர்.	ரூ.810/-	சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது.

மேற்படி தளத்தில் உள்ள அலுவலர்களின் கைபேசியில் உள்ள G-Pay, Phone Pay, Paytm மற்றும் வங்கி பரிவர்த்தனைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகள் எதுவும் காணப்படவில்லை.

மேலும் இந்த திடீர் கூட்டாய்வின்போது கைப்பற்ற கணக்கில் வராத ரொக்கம் ரூ.79,620/- அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பெற்று வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கக்கூடும் என தெரியவந்ததால் மேற்படி

தொகைகள் கைப்பற்றப்பட்டது. மேலும் G-Pay பரிவர்த்தனைகள் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் முன்பு கடந்த 6 மாதங்களுக்குண்டான பரிவர்த்தனைகளை சோதனை செய்தபோது கிடைத்த பணபரிவர்த்தனை விபரம் பின்வருமாறு:

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை மற்றும் GPay
1	திரு.கார்த்திக், வரிவசூலர், மதுக்கரை நகராட்சி, கோவை	ரூ.6,040/- மற்றும் GPay Amount Rs.7,52,572/-
2	திரு.எஸ்.வல்லரசு வரிவசூலர், மதுக்கரை நகராட்சி, கோவை	ரூ.4,300/- மற்றும் GPay Amount Rs. Rs.19,65,655/-
3	திரு.மணிகண்டன், துப்புரவு ஆய்வாளர், மதுக்கரை நகராட்சி, கோவை	GPay Amount Rs.6,43,400/-
4	திருமதி.J.அனிதா, வயது 47, த/பெ.ஜெகநாதன், தூய்மை பணியாளர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.	ரூ.100/- G-Pay amount Rs.3,83,342/- (3-மாதத்திற் குண்டான பரிவர்த்தனைகள்)
5	திருமதி.S.சோபனா, வயது 34, க/பெ.ஜெகதீஸ்பிரசாத், இரவு காவலர், மதுக்கரை நகராட்சி, கோயம்புத்தூர்.	G-Pay amount Rs.5,06,873/-
6.	திரு.C.ராஜேஸ்குமார், த/பெ.செல்லக்குட்டி, ஒப்பந்ததாரர், கதவு எண்.5/49, சீனியூர், கோவை.	ரூ.50,000/- ரொக்கப்பணம்
7	திருமதி.M.சித்ரா, க/பெ.முருகன் அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோவை.	ரூ.5,280/- ரொக்கப்பணம்
8	திரு.L.ரவிக்குமார், த/பெ.லட்சுமணன், ஒப்பந்ததாரர் 8/334H, ராக்கியண்ணன் கோவில் வீதி, குரும்பாளையம், கோவை	ரூ.14,000/- ரொக்கப்பணம்

மேலும் திடீர் சோதனையின்போது அவ்வலுவலகத்தின் பிரிவுகளில் பராமரிக்கப்பட்டு வரும் 2-எண்ணிக்கைகளான ஆவணங்களின் நகல் எடுக்கப்பட்டு அதில் நகராட்சி ஆணையாளர் அவர்களது சான்றொப்பம் பெறப்பட்டது. மேற்படி ஆவணங்கள் விபரம் சோதனை நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் தணிக்கையின் போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.79,620/- ஆகும். மேலும் இந்த திடீர் சோதனையின்போது லஞ்சமாக பெறப்பட்டதாக கருதப்படும் தொகை ரூ.42,51,842/-க்கான டிஜிட்டல் பண பரிவர்த்தனையும் கண்டறியப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக திடீர் ஆய்வு நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டது. திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் பணம் ரூ.79,620/-. மேலும் 8 பேர் பணம் இருப்பு வைத்துள்ளமைக்கு எழுத்து மூலமாக கொடுத்த விளக்க கடிதம், திடீர் ஆய்வு நடவடிக்கை மற்றும் இதர ஆவணங்களின் நகல்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்படி திடீர் தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்படி முறைகேடுகள் சம்மந்தமாக 1) திரு.S.கார்த்திக், வருவாய் உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோவை, 2) திரு.S.வல்லரசு, இளநிலை உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோவை, 3) திரு.C.ராஜேஸ்குமார், த/பெ.செல்லக்குட்டி, ஒப்பந்ததாரர், கதவு எண்.5/49, சீலியூர், கோவை, 4) திருமதி. அனிதா, தூய்மைப்பணியாளர், மதுக்கரை நகராட்சி, கோவை, 5) திரு.S.மணிகண்டன், துப்புரவு ஆய்வாளர், நகராட்சி, மதுக்கரை நகராட்சி, கோவை, 6) திருமதி.S.சோபனா, க/பெ.ஜெகதீஸ்பிரசாத், இரவு காவலர், மதுக்கரை நகராட்சி. கோவை, 7) திரு.L.ரவிக்குமார், த/பெ.லட்சுமணன், ஒப்பந்ததாரர், 8/334H, ராக்கியண்ணன் கோவில் வீதி, குரும்பபாளையம், கோவை, 8) திருமதி.M.சித்ரா, க/பெ.முருகன், அலுவலக உதவியாளர், மதுக்கரை நகராட்சி, கோவை ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxxx) 24/10/2026 (N.விஜயகுமார்) துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். இணைப்பு: 1) திடீர்

சோதனை நடவடிக்கை, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.79,620/- 3) கைப்பற்றப்பட்ட 2 ஆவண நகல்கள் மற்றும் 4) 8 பேர் பணம் இருப்பு வைத்துள்ளமைக்கு எழுத்து மூலமாக கொடுத்த விளக்க கடிதம். Sir, Received the complaint on 24.10.2026 at about 15.00 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.22/2026/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 and u/s 106 BNSS on 24.10.2026 at about 17.00 hrs. (Sdxxxxx) (D.SHEELA), Ins of Police, V&AC, Coimbatore 24/10/2026 மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட 8 பேர் பணம் இருப்பு வைத்துள்ளமைக்கு எழுத்து மூலமாக கொடுத்த விளக்க கடிதம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான தனி நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

24/10/26

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோவை.